# தமிழ்நாடு தகவல் ஆணையம்

**எண்.2, தியாகராயர் சாலை (ஆலையம்மன் கோயில் அருகில்), எல்டாம்ஸ் ரோடு சந்திப்பு, தேனாம்பேட்டை, சென்னை - 600 018. தொலைபேசி எண். 24347590**

**ஆணை நாள்: 10.11.2020**

**முன்னிலை**

## திரு ச. த. தமிழ்குமார், பி.ஏ., பி.எல்.,

**மாநில தகவல் ஆணையர்**

...............

**வழக்கு எண்.NC2622/F/2019 (SA202/F/2019)**

திரு D. பிரான்சீஸ் ... மேல்முறையீட்டாளர்

**எதிர்**

பொதுத் தகவல் அலுவலர்,
தமிழ்நாடு அரசு போக்குவரத்துக் கழகம்
(சேலம்) லிட்.,
எண்.12, இராமகிருஷ்ணா ரோடு,
சேலம் - 636 007. ... பொது அதிகார அமைப்பு

பார்வை:-

| | |
|---|---|
| மனுதாரர் தகவல் பெறும் உரிமைச் சட்டம் பிரிவு 6(1) கீழ் மனு செய்த நாள் | 15.10.2018 |
| முதல் மேல்முறையீட்டு நாள் - பிரிவு 19(1) | 19.11.2018 |
| மனுதாரரின் இரண்டாம் மேல்முறையீட்டு மனு - பிரிவு 19(3) | 03.01.2019 |
| ஆணையத்தின் ஆணை நாள் | 22.08.2019 |
| ஆணை பெறப்படாத மனு நாள் | 13.11.2019 |

******

# ஆணை

இவ்வழக்கு ஏற்கனவே 22.08.2019 அன்று விசாரணை மேற்கொள்ளப்பட்டு பொதுத் தகவல் அலுவலரை 30 தினங்களுக்குள் தகவல் வழங்க உத்தரவிடப்பட்டிருந்தது. பொதுத் தகவல் அலுவலர் தகவல் வழங்காத காரணத்தினால், இவ்வழக்கு தமிழ்நாடு அரசால் COVID-19 காரணமாக ஊரடங்கு (LOCK DOWN) பிறப்பிக்கப்பட்டுள்ள நிலையில் தமிழ்நாடு தகவல் ஆணையத்தில் வைத்து நேரடியாக விசாரணை செய்ய இயலாத காரணத்தால் இன்று

(10.11.2020) தொலைபேசி மூலம் தொடர்பு கொண்டு வழக்கு விசாரணை மேற்கொள்ளப்பட்டது. இவ்விசாரணையில் மனுதாரர் திரு D. பிரான்சீஸ் மற்றும் பொது அதிகார அமைப்பின் பொதுத் தகவல் அலுவலர், தமிழ்நாடு அரசு போக்குவரத்துக் கழகம், ராணித் தோட்டம், நாகர்கோவில், கன்னியாகுமரி மாவட்டம் ஆகியோர் தொலைபேசி விசாரணையில் ஆஜரானார்கள்.

2. மேல்முறையீட்டாளர் தகவல் பெறும் உரிமைச் சட்டம், 2005, பிரிவு 6(1)-ன் கீழ் 15.10.2018 தேதியிட்டு தாக்கல் செய்துள்ள மனுவில், தான் தற்போது குழித்துறை கிளை 1-ல் ஓட்டுநராக பணிபுரிந்து வருவதாகவும் தனக்கு செடியூல்ட் Duty இல்லாமல் Postingல் பணி செய்தபொழுது தனக்கு இந்த யூனியனுக்குள்ள பணி என்று கூறி செடியூல்ட் பணி போட்டு தரவில்லை என்றும் யூனியனுக்கு வேண்டப்பட்ட நபர்களுக்கு பணி கொடுக்க செட்டிமென்டிலோ அல்லது நிர்வாக Standing Order-ல் குறிப்பிட்டிருந்தால் அதன் நகல், செட்டிமென்ட்டில் சுழல் முறை பணி என்றுள்ளதை அமுல்படுத்தாமலும் தொழிலாளிக்கு பணி என்றில்லாமலும், யூனியனுக்கு தான் பணி என்று எந்த உத்தரவில் வழங்கப்பட்டுள்ளது அதன் நகல், OT அடித்தால் C/ Off வழங்கக் கூடாது என்ற நிர்வாக Standing Order-ன் நகல், பணி செய்து கொண்டிருக்கும் போது உறவினர் இறந்து விட்டார் என்ற செய்தி அல்லது தனக்கு உடல்நலம் இல்லாமல் தொடர்ந்து பணி செய்ய முடியாத சூழ்நிலை ஏற்பட்டு பணிமுடிக்கும் போது அன்றைய பணி ஆனது நான்கு மணி நேரத்திற்கு மேலே ஆகியிருந்தால் அன்றைய தினத்திற்கு line sick / line Message வருகை பதிவு கொடுக்கக் கூடாது என்பதற்கான நிர்வாக Standing Order நகல், பேருந்து பழுது ஆகி நின்று ரிப் கட்டு ஆகியதற்கு Double Duty கொடுக்கக் கூடாது என்ற நிர்வாக Standing Order நகல் மற்றும் பேருந்து சாலையில் சென்று கொண்டிருக்கும் போது முன்வீல் மண்ணில் புதைந்து இறங்கி அதை டிரக்கர் மூலம் தூக்கி எடுக்கப்படும் சூழ்நிலையில் எந்த ஒரு சிதைவும் ஏற்படாமல் இருந்தாலும் அந்த ஓட்டுனருக்கு மறுநாள் பணி வழங்கக் கூடாது என்றும், தலைமை அலுவலகத்திற்கு சென்று மேல்அதிகாரியைப் பார்த்தபின்னர் தான் பணி வழங்கவேண்டும் என்ற Standing Order-ன் நகல் என்பது போன்ற தகவல்களை 8 இனங்களில் குறிப்பிட்டு வழங்கக்கேட்டு, பொதுத் தகவல் அலுவலர், தமிழ்நாடு அரசு போக்குவரத்துக் கழகம், ராணித் தோட்டம், நாகர்கோவில், கன்னியாகுமரி என விலாசமிட்டு விண்ணப்பித்துள்ளார்.

3. பொதுத் தகவல் அலுவலர் தகவல் ஏதும் வழங்காத காரணத்தினால், மேல்முறையீட்டாளர் தான் கோரிய தகவல் வழங்கப்படவில்லை என தெரிவித்தும், தான் கோரிய உரிய தகவல்களை அளிக்க கேட்டும், 19.11.2018 தேதியிட்ட முதல் மேல்முறையீட்டு மனுவை பிரிவு 19(1)ன் கீழ் முதல் மேல்முறையீட்டு அலுவலருக்குத் தாக்கல் செய்துள்ளார். பொது மேலாளர் / பொதுத் தகவல் அலுவர் 29.12.2018 நாளிட்ட கடிதம் வாயிலாக இனம் வாரியாக தகவல் வழங்கியுள்ளார். அத்தகவலில் திருப்தியடையாத மேல்முறையீட்டாளர், மேல்முறையீட்டு அலுவலரும் தகவல் வழங்காத காரணத்தினால், மனுதாரர் பிரிவு 19(3)ன் கீழ் 03.01.2019 தேதியிட்ட இரண்டாவது மேல்முறையீட்டு மனுவை மேல்முறையீட்டாளர் இவ்வாணையத்தில் தாக்கல் செய்துள்ளார். அம்மனு மீது 22.08.2019 அன்று **SA202/F/2019** ஆணை வாயிலாக பொதுத் தகவல் அலுவலரை 30 தினங்களுக்குள் தகவல் வழங்க உத்தரவிடப்பட்டிருந்தது. பொது அதிகார அமைப்பினரால் தனக்கு உரிய தகவல் வழங்கப்படாததால் மேல்முறையீட்டாளர் 13.11.2019 நாளிட்ட மனுவை ஆணையத்திற்குத் தாக்கல் செய்துள்ளார். அம்மனுவின் அடிப்படையில் இவ்வழக்கு இன்று (10.11.2020) விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்டது.

4. இன்றைய தொலைபேசி விசாரணையில் ஆஜரான மனுதாரர், தான் கோரிய இனம் 4 மற்றும் 7க்கான விரிவான மற்றும் முழுமையான தகவல்களை பெற்று வழங்குமாறு ஆணையத்தைக் கேட்டுக்கொண்டார்.

5. விசாரணையின்போது பொது அதிகார அமைப்பின் சார்பாக ஆஜரான பொதுத் தகவல் அலுவலர், மேல்முறையீட்டாளர் கோரிய இனம் 4 மற்றும் 7க்கான விரிவான மற்றும் முழுமையான தகவல்களை மேல்முறையீட்டாளருக்கு வழங்குவதாக தெரிவித்தார்.

6. மேல்முறையீட்டாளரின் மனுவையும், பொதுத் தகவல் அலுவலர் அளித்த தகவல்களையும் ஆணையம் பரிசீலனை செய்ததில், மேல்முறையீட்டாளருக்கு உரிய, முழுமையான தகவல் வழங்கப்படாமல் உள்ளது தெரிய வருகிறது. உரிய தகவல் வழங்காத அலுவலரை ஆணையம் வன்மையாக கண்டிக்கிறது. விசாரணையின் முடிவில் ஆணையம் கீழ்கண்ட உத்தரவு பிறப்பிக்கிறது:

- **மேல்முறையீட்டாளருக்கு ஆணையத்தின் ஆணைக்குப் பிறகும் ஏறத்தாழ இரண்டு வருட காலமாக பதில் அளிக்காத அப்போதைய பொதுத் தகவல் அலுவலரை தகவல் பெறும் உரிமைச் சட்ட பிரிவு 20(1)ன் கீழ் நாள் ஒன்றுக்கு ரூ.250/- வீதம் ரூ25,000/- தண்டம் ஏன் விதிக்கக்கூடாது என்பதற்கான அவரது எழுத்துமூல விளக்கத்தினை இவ்வாணை கிடைக்கப்பெற்ற 1 வார காலத்திற்குள் பதிவஞ்சல் மூலம் ஆணையத்திற்கு சமர்ப்பிக்கவேண்டும் என்றும் இப்போதைய பொதுத் தகவல் அலுவலருக்கு ஆணையம் உத்தரவிடுகிறது.**

- **மனுதாரர்/மேல்முறையீட்டாளர் 15.10.2018 தேதியிட்ட மனுவில் கோரிய விடுபட்ட இனங்களுக்கான முழுமையான தகவல்களை இவ்வாணை கிடைக்கப்பெற்ற 7 தினங்களுக்குள் தகவல் பெறும் உரிமைச் சட்டப்பிரிவு 7(6)ன்படி கட்டணமின்றி பதிவுத் தபாலில் அனுப்பி வைத்து, வழங்கப்பட்ட தகவல் மற்றும் மேல்முறையீட்டாளர் ஏற்பளிப்பு செய்த ஒப்புகை அட்டையின் நகலை இவ்வாணையத்திற்கு அனுப்பி வைக்க தற்போதைய பொதுத் தகவல் அலுவலருக்கு ஆணையம் உத்தரவிடுகிறது.**

- **மேல்முறையீட்டாளர் 15.10.2018 தேதியிட்டு தகவல் பெறும் உரிமைச் சட்டம், 2005, பிரிவு 6(1)-ன்கீழ் தாக்கல் செய்துள்ள மனுவில் கோரியுள்ள தகவலை வழங்கத் தவறும்பட்சத்தில் பொதுத் தகவல் அலுவலர் மீது தகவல் பெறும் உரிமைச் சட்டம், 2005, பிரிவு 20 (1) -ன்கீழ் நடவடிக்கை எடுக்கப்படுமென்று ஆணையம் எச்சரிக்கின்றது.**

ஒம்/- (**ச.த. தமிழ்குமார்**)
மாநில தகவல் ஆணையர்

(ஆணையத்தின் ஆணைப்படி)

உதவிப் பதிவாளர்

**வழக்கு எண்.NC2622/F/2019 (SA202/F/2019)**

**பெறுநர்**
பொதுத் தகவல் அலுவலர்,
பொது மேலாளர்,
தமிழ்நாடு அரசு போக்குவரத்துக் கழகம்
ராணித்தோட்டம்,
நாகர்கோவில்,

**மனுதாரர்/ மேல்முறையீட்டாளர்**
திரு D. பிரான்சீஸ்,
வெங்ஙதனாங்கோடுவீடு,
மேல்புறம் ஜங்ஷன்,
பகோடு அஞ்சல்.

Copy to: Judgement File/ Spare
JE / PA 19.11.2020